# நாடி

Pulse of the Singapore Muslim Community

*நாடி 23 ஹிஜ்ரி 1435 ஜமாதுல் ஆஹிர் ஏப்ரல் 2014* இலவசம்





# நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையத்தின் ஏற்பாட்டில் இந்திய முஸ்லிம் முன்னோடிகளுக்கு பாராட்டு விருதுகள்

# மரபுடைமை நிலையம் நாகூர் தர்கா கந்தூரி விழா

இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம் நாகூர் தர்காவில் ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் கந்தூரி விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1.4.2014 அன்று மாலை, தெலுக் ஆயர் வீதி தர்காவில், மவ்லூது ஓதப்பட்டது. பெரும் எண்ணிக்கையில் இரு பாலரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அல் அப்ரார் பள்ளிவாசல் இமாம் மில்லத் இஸ்மாயில் ரியாஜி, நாகூர் ஆண்டகையின் நல்லுபதேசங்களை தமது உரையில் எடுத்துரைத்தார். ஆன்மீகம், மனிதநேயச் சேவை, சமூக முன்னேற்றக் கட்டமைப்பு ஆகியவற்றை ஷாஹுல் ஹமீது நாயகர் உபதேசித்து, சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்கள். அவர்களின் முன்னுதாரணமான நற்பணியை அக்கால அரசர்களும் போற்றிப் புகழ்ந்ததை அவர் சுட்டிக் காட்டினார்.

நாகூர் தர்கா நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் ஹாஜி ஷரஃப்தீனும், செயலாளர் ஹாஜி நசீர் கனியும் அனைவரையும் வரவேற்றனர்.

மக்ரிப் தொழுகைக்குப் பிறகு துஆ ஓதி கொடியேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அனைவருக்கும் தப்ரூக் வழங்கப்பட்டது.

கொடியேற்றத்தை அடுத்து, 13.4.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியிலிருந்து நண்பகல் 12.30 வரை, நாகூர் ஆண்டகை ஹளரத்சையிது ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் கந்தூரி விழா நிகழ்ச்சிகள் மரபுடைமை நிலையத்திலும், அல் அப்ரார் பள்ளி வாசலிலும் நடைபெற்றன.

இமாம் மில்லத் இஸ்மாயில் ரியாஜி சன்மார்க்க உரையாற்றினார். இஸ்லாமிய தீன்நெறிப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

சமுதாய முன்னோடிகளைச் சிறப்பிக்கும் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. தகவல் தொடர்பு அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையத்தின், அந்த விருதுகளை நமது



முன்னோடிகளுக்கு வழங்கினார். முன்னாள் அமைச்சர் ஜைனல் ஆபிதீன் ரஷீத், முயிஸ் நிர்வாக அதிகாரிகள், இந்திய முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் முன்னிலை வகித்தனர். மரபுடைமை நிலைய நிர்வாகச்செயலாளர் ஹாஜி நசீர் கனி அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எம்.கே.ஏ.ஜப்பார் அவர்களுக்குரிய விருது, அவருடைய குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது. தக்கலை முஸ்லிம் சங்கத்தின் தலைவர் பக்கீர்மைதீன், ஹாஜி இப்ராஹிம் மரைக்கான், ஹாஜி ஏ.ஜி. முஸ்தபா, ஹாஜி முஹம்மது ஷா, ஹாஜி சிராஜுதீன், ஹாஜி உஸ்மான் அப்துல்லா, கடையநல்லூர் ஓ.ஒ. முஹம்மது யூசோப், ஹாஜி முஹம்மது மெய்தீன் பிரோஸ் கான் ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டது.

சிங்கப்பூர் சமூக, சமய மேம்பாட்டுக்கு இந்திய முஸ்லிம்கள் அரிய பங்காற்றியுள்ளதை முஸ்லிம் விவகார அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், தமது உரையில் வெகுவாகப் பாராட்டினார். முன்னோடிகளைச் சிறப்பிக்கும் இத்தருணத்தில் அவர்களின் வழியில் இளைய தலைமுறையினர் நற்பணிகளைத் தொடர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். முன்னோர்களைச் சிறப்பிக்கும் இந்த நிகழ்ச்சி முன்னுதாரணமானது என்று அமைச்சர் யாகூப் இப்ராஹிம் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தார்.

லுஹர் தொழுகையைத் தொடர்ந்து, பள்ளிவாசலிலிருந்து அனைவரும் நாகூர்

# உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு

அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய எட்டாம் மாநாடு, 2014 பிப்ரவரி 14,15,16 நாட்களில் தமிழகத்தின் கும்பகோணம் நகரில் நடைபெற்றது. 'இலக்கியங்களால் இதயங்களை இணைப்போம்' என்ற கருப் பொருளோடு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

'முஸ்லிம்களின் இசைப்பாடல் மரபுகள்' என்ற தலைப்பில் மாநாட்டு ஆய்வரங்கு வடிவமைக்கப் பட்டிருந்தது. இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தலைவர் கவிக்கோ அப்துல் ரகுமான், முஸ்லிம் இலக்கியப் பரப்பில் இசைப்பாடல் மரபுகள் பற்றியும், முஸ்லிம்களின் பண்பாட்டில் இசை பெற வேண்டிய முக்கியத்துவம் பற்றியும் மாநாட்டுத் தொடக்கவுரையில் எடுத்துரைத்தார்.

இசைமுரசு நாகூர் ஈ.எம். ஹனிபா அவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சத்துடன் கூடிய உமறுப்புலவர் சிறப்பு விருது வழங்கப்பட்டது. காரைக்கால் ஏ.எம். தாவூத், நாகூர் எஸ்.எம்.ஏ. காதர், இஸ்லாமிய இசைப்பாடகி சரளா போன்றோருக்கு இசைப் பங்களிப்புக்காக வாழ்நாள் சேவை விருதுகள் வழங்கப்பட்டன. குமரி அபூபக்கரும் சிறப்புவிருதைப் பெற்றார். மற்றும் பல இசைக் கலைஞர்களுக்கும் இலக்கிய கர்த்தாக்களுக்கும் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

சிங்கப்பூரைச் சிறப்பிக்கும் வகையில் எழுத்தாளர் ஜே.எம். சாலிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை, இஸ்லாமிய இலக்கியக் கழகம் வழங்கியது. சாலியின் சார்பில், சிங்கப்பூரின் பேராளராக மாநாட்டில் பங்கேற்ற இலியாஸ் விருதுப் பட்டயங்களைப் பெற்றுக் கொண்டார். ஆய்வுக் கட்டுரையைப் படைத்த



இலியாஸ் அவர்களின் எழுத்துப் பணியைப் பாராட்டி இலக்கியச் சுடர் விருது வழங்கப்பட்டது.

கவி கா.மு. ஷரீப் அரங்கமும் புலவர் ஆபிதீன் அரங்கமும் இசைப் பாடல் துறைக்கு பங்களிப்புச் செய்தவர்களின் பெருமையை எதிரொலிப்பதாக அமைந்திருந்தன. நாகூர் சலீமின் இசைப் பாடல் பங்களிப்புப் பற்றியும், புலவர் ஆபிதீனின் இஸ்லாமிய கீத பாடல்கள் பற்றியும் கருத்தரங்குகளில் உரையாடப்பட்டன. தமிழ் நாட்டுச் சூழலில் வெவ்வேறு வகைகளில் இசை மரபுகள் மக்கள் வாழ்வில் பயிலப்பட்டு வருவதைப் பற்றிய பல தகவல்கள் மாநாட்டில் பரிமாறப்பட்டன.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் அனைவரது கவனத்தையும் கவரும் இசைக் கச்சேரிகளும் இடம்பெற்றன.

இஸ்லாமிய இலக்கியக் கழகம், கும்பகோணம் கிஸ்வா அமைப்புடன் இணைந்து அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய எட்டாம் மாநாட்டை நடத்தியது. முஸ்லிம்களின் இசைப் பாடல் மரபுகளின் ஆய்வுக்கும் இரசனைக்கும் விருந்தாக அமைந்த இந்த மாநாடு பெருமைக்குரியது என்று பேராளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

---

தர்காவுக்கு அழைக்கப்பட்டு தப்ரூக் வழங்கப்பட்டது.

நமது முன்னோர்களால் 1830ல் தெலுக் ஆயர் வீதியில் கட்டி முடிக்கப்பட்ட நாகூர் தர்கா, 1974ஆம் ஆண்டில் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. 20.5.2011ல் தர்காவை மரபுடைமை நிலையமாக முன்னைய அதிபர் எஸ்.ஆர். நாதன் அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். மறுவாரம் ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் மவ்லூது மரபுடைமை நிலைய மேல்தளத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஜமாதுல்ஆகிர் மாதம் கந்தூரி விழாவும் மவ்லூதும் நடத்தப்பட்டு வருகிறது.

# தமிழ் முஸ்லிம் மொழி இலக்கிய முன்னோடிகள்

இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி, எனும் இலக்குடன் தமிழ் முஸ்லிம் சமூகம் மொழி இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றி வருகிறது. ராஃபிள்ஸ் நவீன சிங்கப்பூரைத் தோற்றுவித்த காலத்திலிருந்தே, தமிழ் முஸ்லிம்கள் மொழி வளர்ச்சியில் முனையத் தொடங்கி விட்டனர். சிங்கப்பூரில் தமிழ்மொழி மாதம் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் கொண்டாடப்படும் இத்தருணத்தில் நமது முன்னோடிகளின் மொழி இலக்கியப் பணிகளை எண்ணிப் பார்ப்போம்.

முன்ஷி அப்துல்லாவை *1819*ல் ராஃபிள்ஸ் சிங்கப்பூருக்கு அழைத்து வந்ததை அறிவோம். நாகூர் வம்சாவழியினரான அவர், தமிழ், மலாய், ஆங்கிலம் கற்றவர். பஞ்சதந்திரக் கதைகளையும், பைபிள், பத்துக் கட்டளையும் மலாய்மொழியில் அவர் மொழிபெயர்த்தார். முன்ஷி அப்துல்லாவிடமே ராஃபிள்ஸ் மலாய் மொழி கற்றுக்கொண்டார்.

அடுத்த முன்னோடியாக மதித்துப் போற்றத் தக்கவர் மகுதூம் சாயபு. *1840*ல் சிங்கையில் குடியேறிய அவர் முதல் தமிழ் பத்திரிகையையும், அச்சகத்தையும் நடத்தினார் *1887*ல் சிங்கைநேசன் வார இதழை நடத்தத் தொடங்கினார். சிங்கை நேசன் பத்திரிகையின் ஆசிரியராகவும் அவர் இருந்தார்.

நாகூர் பதிகம், முகியித்தீன் ஆண்டவர் திருப்புகழ், முதலான நாற்பது நூல்களை தமது தீனோதயவேந்திர அச்சகத்தின் மூலம் மகுதூம் சாயபு வெளியிட்டு உதவினார். சிறுகதை, புதின இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோட்டமாக, அவர் மேற்கொண்ட பணிகள் பரவலானவை. நாவல் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நூதனக் கட்டுக்கதை என்றுபொருள் கூறிய மகுதூம் சாயபு, அத்தகைய நெடுங்கதைகள் சிங்கப்பூரிலும் படைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

சிங்கப்பூரின் முதல் தமிழ் எழுத்தாளர் எனும் பெருமைக்குரிய அவர், நாவல்களை எழுதாவிட்டாலும், உரையாடல் பாணியில் எழுதிய கதைகள் நூலகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளன. *1904*ஆம் ஆண்டில் ஹூர்மூஸ்


சிங்கைநேசன்.

Singai Nesan.

Vol. I.] [No. I.

MONDAY, 27TH JUNE, 1887.

DEDICATION

மலர் 1, இதழ் 1. ஜூன் 27, 1887. (இராபில் நூலகம், சிங்கப்பூர். உதவி – ஜே.எம். சாலி)

கதையும், *1908*ல் ஹஸ்ஸான் கன்னிகை சரித்திரமும் நெடுங்கதைகளாக வெளிவந்தன.

மறக்கமுடியாத மற்றொரு பத்திரிகையாளர் எம்.எம்.புகாரி. நாகூரைச் சேர்ந்த இவர் *1931*ல் நவநீதம் வார இதழை சிங்கப்பூரில் தொடங்கினார். மூன்று ஆண்டுகள் வெளிவந்தாலும் தமிழ் படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியது.

சந்திரவதனப் பிரகாசம் எம்.எம்.புகாரி எழுதிய பிரபலமான நாவல். சிங்கப்பூர் விக்டோரியா அச்சகத்தில் *1931*ல் இந்த நாவல் அச்சிடப்பட்டது. லட்சுமிகந்தம், கபீர் காந்தி ஆகிய நாவல்களையும் அவர் எழுதி வெளியிட்டார். பூதத்தம்பி முதலியார் என்ற நாடக நூலையும், பூமணம் எனும் வாழ்வியல் நூலையும் வெளியிட்டு *1930*களில் சிங்கப்பூர் புனைகதை வளர்ச்சிக்குப் பங்காற்றியிருக்கிறார் புகாரி.

சிங்கப்பூர் மலாயா படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய ஒரு முக்கிய இதழ், மலாயா நண்பன். நாளிதழாக *1942*ஆம்

# சிங்கை நாகூர் சங்க குடும்ப தின விழா

நாகூர் சங்கத்தின் குடும்ப தின விழா 23.02.2014 அன்று ஈஸ்ட் கோஸ்ட் பார்க்கில் நடைபெற்றது.

"இஸ்லாத்தில் குடும்பவியல்" என்ற தலைப்பில், பென்கூலன் மஸ்ஜித் இமாம் மவுலானா மவுலவி அப்துல் கையூம் பாக்கவி சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசிய, திருவாட்டி ஹலிமா யாக்கூப், இளைய தலைமுறை முஸ்லிம்கள் கல்வியில் சிறந்து விளங்குவதோடு, நமது கலாச்சாரத்தைப் பேண வேண்டும் என்றார். பெற்றோர்களை மதித்து நடக்கவும் அறிவுரை கூறினார்.

கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவியருக்கும், கிராஅத், கால்பந்து, சிறகு பந்து, கேரம் போர்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் சிங்கப்பூரின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மறைந்த ஹாஜி எம்.கே.ஏ.ஜப்பார் அவர்களின் நினைவாக, பரிசுகளை சிறப்பு விருந்தினர் வழங்கினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக, சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்தின் இயக்குநர் இம்ரான் பின் முஹம்மது கலந்து கொண்டார்.

விழாவில் கலந்து கொண்ட சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவை தலைவர் ஜனாப் பரிஹுல்லா, மஸ்ஜித் ஜாமியா சூலியாவின் நிர்வாகக் குழு தலைவர் ஜனாப் ஃபக்ருதீன்,




சங்கத்தின் மூத்த உறுப்பினர் ஹாஜி மைதீன் மரைக்காயர், பொதக்குடி சி.சி.ஜகபர், நாகூர் கவிஞர் சாதிக், பிரபல இஸ்லாமிய பாடகர் ஜைனுல் ஆபிதீன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்யப்பட்டது.

சிங்கப்பூரையும், நாகூர் சங்கத்தையும் வாழ்த்தி கவிஞர் சாதிக் எழுதிய பாடலை ஜைனுல் ஆபிதின் பாடினார். தஹியதுல் அல் கல்பி பே கருத்துரை ஆற்றினார். பெண்களுக்கு மருதாணி இலவசமாக போடப்பட்டது. குழந்தைகளுக்காக மேஜிக் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. நாகூரைச் சார்ந்த ஏராளமானோர் குடும்பத்துடன் விழாவில் கலந்து கொண்டனர்.

---

ஆண்டில் தொடங்கப்பட்ட அது, எழுத்தாளர்களையும் பத்திகையாளர்களையும் பெரும் எண்ணிக்கையில் உருவாக்கியது. வார இதழாகவும் மாறிய மலாயா நண்பனின் இருபதாண்டு கால இலக்கியப்பணி வளமானது, விரிவானது. அதன் ஆசிரியராக விளங்கிய மு.கரீம்கனியும் ஆசிரியர் குழுவில் பல்வேறு கட்டங்களில் பங்காற்றியவர்களும் பல சிறுகதைகளையும் தொடர்கதைகளையும் படைத்தனர். அந்த இதழில் பணியாற்றிய ஆர்.பி.எம்.கனி பி.ஏ.,பி.எல் புதுப்பணக்காரர் எனும் தொடர்கதையை எழுதினார்.

முபக்ருதீன் சாகிப் 1946ஆம் ஆண்டில் பேனாமுனை இதழைத்தொடங்கினார். மாதம் இருமுறை வெளிவந்த பேனாமுனை, மூன்றாண்டு காலம் இலக்கியப் பணியாற்றியது.

சிங்கப்பூர்த் தமிழ் முஸ்லிம்களின் தொடக்கக்கால மொழி இலக்கியப் பணிகுறித்த மேலோட்டமான ஒரு பார்வையே இது. தமிழ்மொழி மாத விழாவைக் கொண்டாடிவரும் அமைப்புகள், நமது முன்னோடிகளின் நற்பணிகளுக்கு உரிய முன்னுரிமை வழங்கவேண்டும். - **ஜே.எம்.எஸ்.**

# சர்வ சமய நிறுவனத்தில் ஹாஜா மைதீன்

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைமை நிர்வாகி, ஜனாப் ஹாஜா மைதீன், சர்வ சமய நிறுவனத்தின் (IRO) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பால்வி மஸ்ஜித் இமாம் ஹபீப் சையது ஹஸன் பின் முஹம்மது அல்அத்தாஸ், சர்வ சமய நிறுவனத்தின் தலைவர் நூர் முஹம்மது மரைக்கான் ஆகியோர் அவரை நியமனம் செய்தனர்.

சர்வ சமய நிறுவனம், பல சமயத் தலைவர்கள் மற்றும் மக்களிடையே நட்புறவையும் ஒத்துழைப்பு உணர்வையும் மேம்படுத்துவதற்காக, 1949ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. பல இன, பல சமய மக்களிடையே அமைதியையும் நல்லெண்ணத் தையும் வளர்ப்பது அதன் நோக்கம்.

சர்வ சமய நிறுவனம், பல சமயங்களைச் சார்ந்தவர்களிடையே பரஸ்பர நல்லெண்ணத் தையும், விசுவாசத்தையும் வளர்க்கும் நற்பணிகளைச் செய்துவருகிறது. அவர்களி டையே புரிந்துணர்வை மேம்படுத்தும் அனைத்து சமய கலந்துரையாடல்களையும் நடத்துகிறது.

சமூக வளர்ச்சி-குடும்ப மேம்பாட்டு அமைச்சர், திரு. சான் சுன் சிங், சர்வ சமய நிறுவனத்தின் மார்ச் 2014 அதிகாரபூர்வ



பதிப்பை, குழுத்தலைவர்கள், தூதரகத்தினர் முன்னிலையில் வெளியிட்டார்.

## நபி மொழி

**நல்லதைப் பேசுங்கள்**

அல்லாஹ்வின்மீதும் மறுமை நாள்மீது நம்பிக்கை கொண்டவர் நல்லதைப் பேசட்டும்; அவரது வாய் அண்டை வீட்டாருக்குத் தொல்லை தர வேண்டாம். அவர் தமது விருந்தாளியைக் கண்ணியப் படுத்தட்டும்" என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம் : புகாரி

# பள்ளிவாசல்களுக்கு தொண்டூழியர்கள்

மத்திய, தெற்கு வட்டாரப் பள்ளிவாசல்களில் தொண்டூழியர்களாகப் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என்று முயிஸ் தெரிவித்திருக்கிறது.

அந்தப் பள்ளிவாசல்களின் பட்டியலை இஸ்லாமிய சமய மன்றம்வெளியிட்டுள்ளது. அவை: அல் அமீன், அப்துல் கஃபூர், அல் அப்ரார், அல் ஃபலாஹ், பென்கூலன், ஹாஜி முஹம்மது சாலிஹ் (பால்மர்), ஜாமியா சூலியா, ஜாமியா குவின்ஸ்டவுன், ஜாமியா அர்ராஃபிதா, கம்போங் டெல்டா, மலபார் மஸ்ஜித், மவுலானா முஹம்மது அலி, முஜாஹிதீன், உமர் கம்போங் மலாக்கா ஆகிய பள்ளிவாசல்களில். மூன்று ஆண்டுகள் தொண்டூழியர்களாக சேவை செய்யவேண்டும். தேர்ந்தெடுக்கப்படுவோர் 2014 நவம்பர் முதல் நாளில் சேவையைத் தொடங்க வேண்டும்.

'நமது பள்ளிவாசல்கள் சமூக இணைப்பின் ஒரு முக்கிய முனையம்' எனும் இலக்குடன் தொண்டூழியர் சேவைத் திட்டத்தை முயிஸ் மேற்கொண்டுள்ளது.

விருப்பமுள்ளவர்கள் முயிஸ் நிலைய பள்ளிவாசல் அலுவலகப் பிரிவில் விண்ணப்பிக்கலாம் இணையத்தளம்: www.muis.gov.sg

# PHOTO NEWS

# படச் செய்திகள்




**The MUIS Lecture, 7th Edition, by Dr. Ismail Seralgeldin, at SIH, 25 Mar 2014**



**Progress Fund Madrasah Assistance Scheme (PROMAS) disbursement, 30 Jan 2014**



**Methodologies in Fatwa (The Darul Ifta Experience) at MUIS Academy, 22 Jan 2014**



**MOU Signing Ceremony - Al-Irsyad & Fitrah Network that spans Indonesia, Malaysia, Singapore & Thailand**



**Private Islamic Educaton Providers (PIENet) Seminar 2014, 22 Feb 2014**



**Completion of upgrading work at Jamiyah Ar-Rabitah, 28 Feb 2014**





**Prime Minister Department Planning Minister YB Minister Tan Sri Joseph Kurup visits SIH, 4 Mar 2014**




**Re-opening of Alkaff Upper Serangoon Mosque, 28 Mar 2014**

# சேவைபுரிவோம், சிறப்படைவோம்!

## இந்திய முஸ்லிம் பேரவைத் தலைவரின் அனுபவப் பகிர்வு




*உழைத்தால் உயரலாம்!*
*முயன்றால் முன்னேறலாம்!*
*சேவையும் தொண்டூழியமும் உயர்வுக்கு உறுதுணை புரியும்!*
*பல அமைப்புகளில் தாம் பொறுப்பு வகித்து வருவதற்கு இவையே ஆதாரம், அடித்தளம் என்கிறார், இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஃபரியுல்லாஹ்.*

இவர் வகிக்கும் பொறுப்புகள் பற்பல.

- சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸ் நிர்வாகக் குழு உறுப்பினர்.
- சிங்கப்பூர் மலாய் முஸ்லிம் சமூக மேம்பாட்டு மன்றமான மெண்டாக்கி செயற்குழுவின் இயக்குநர்.
- லிட்டில் டால்பின்ஸ் பிளே ஸ்கூல்-LDP-அமைப்பின் தலைவர்.
- மூத்த குடிமக்கள் இல்லமான சாஸ்கோ-SASKO-துணைத் தலைவர்.
- பயனீட்டாளர் உதவி கூட்டுறவு சங்கமான-CCCS-பொருளாளர்.
- CCCS ஆலோசனை சேவைப் பிரிவின் பயிற்சி ஆலோசகர்.
- அமெரிக்கத் தூரகத்தின் மாணவர்தொழில் நுட்பப் பிரிவின் பயிற்றுவிப்பாளர்.

“முதுகுளத்தூரில் பிறந்து சிங்கப்பூருக்கு வந்த நான், 16 வயதில்-1982ல், உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியில் சேர்ந்து படித்தேன். பிறகு ஆங்கிலக் கல்வித் தேர்ச்சி பெற்று, வணிகத்தில் ஈடுபட்டிருந்த தந்தையார், அப்துல் வஹாப் சபியுல்லாவுக்கு உதவியபடி மேல்படிப்பிலும் ஈடுபட்டேன். அரசாங்கச் சேவை புரிந்த நான் 1998ல் பிரிட்டனின் லீசெஸ்டர் பல்கலைக்கழக MBA பட்டம் பெற்றேன்” என்று விவரித்தார்.

சமூக சேவையில் ஈடுபடும் ஆர்வத்தில் 1995ஆம் ஆண்டில் ஜனாப் ஃபரியுல்லாஹ் ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தில் சேர்ந்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.ஏ. ஜப்பார் அளித்த ஊக்கத்தினால், 2003வரை படிப்படியாக அதன் செயலாளர், துணைத் தலைவர் பதவிகளை வகித்து 2004ல் சங்கத்தின் தலைவரானார். ஹாஜி ஜப்பார் அவர்களே அந்தவாய்ப்பை வழங்கினார் என்று கூறுகிறார்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் (UIMA) தலைவர் ஃபரியுல்லாஹ் 15.9.2012 அன்று இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேரவையின் செயல் திட்டங்களை அப்போது அவர் எடுத்துரைத்தார்.

சமூகத்திற்குச் சிறப்பாகப் பங்காற்றுவதற்காக மற்ற சுய உதவிக் குழுக்களுடன் இணைந்து செயலாற்றுவது பேரவையின் இலக்கு, அதன் மூலம் நமது சமூகத்துக்கு சிறந்த உதவிகளையும் விரிவான சேவைகளையும் பேரவை வழங்கும்.

நமது சொந்த உள்ளூர் சமயக் கல்வி ஆசிரியர்களைப்பெறும் முயிஸ் திட்டத்திற்கு பேரவை ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கும். நமது சமுதாயத் தேவைகளை ஈடு செய்வதற்கு, குறிப்பாக உள்ளூர் மதரஸாக்களின் வளர்ச்சிக்கு தமிழ்பேசும் மார்க்க ஆசிரியர்கள் அதிக அளவில் தேவைப்படுவதால், அதன் தொடர்பில் பேரவை ஆவனசெய்யும் என்று அவர் கூறினார்.

இந்திய முஸ்லிம் பேரவையின் இலக்குகள் முயிஸ், மெண்டாக்கி, சிண்டா ஆகியவற்றுக்கு இணையாகவும், இணைந்ததாகவும், நிர்வாக அணுகுமுறை

# அஃப்லாக் ஸ்டார்ஸ் மன்ற இளைஞர் அணி ஆய்வரங்கு

அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார மன்ற இளைஞர் அணி, சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக் கழக இஸ்லாமிய வணிக-நிதி அமைப்புடன் இணைந்து இளம் தொழில் முனைவர்களின் சவால் குறித்த ஆய்வரங்கை நடத்தியது. கடந்த ஜனவரி 11 அன்று நடைபெற்ற தொடக்க அரங்கில் உம்மா, மலாய் முஸ்லிம் அமைப்புகள் முதலானவற்றின் 45 பேராளர்கள் பங்கேற்றனர்.

வணிகம், சந்தை வாய்ப்பு முயற்சிகள், விலைவாசி தொடர்பான முன்னோட்டமான அம்சங்களும், அவற்றுக்கான அனுபவங்களும் தீர்வுகளும் ஆய்வரங்கில் பரவலாக ஆராயப்பட்டன. ஷிபா மருத்துவ நிலையத்தின் டாக்டர் முஹம்மது கஸாலி, அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி கலாசார மன்றச்செயலாளர் ஷாஹுல் ஹமீது, ஃபைவ் பில்லர்ஸ் நிறுவனத்தின் ராஜா முஹம்மது, நர்சிங் முஸ்லிமா நிறுவனர் யாஸ்மின் பேகம், இஸ்லாமிய வர்த்தக நிதி அமைப்பின் முன்னைய துணைத் தலைவர் அப்துல் ஹாதி ஆகியோர் அனுபவங்களை எடுத்துரைத்தனர். சிறப்பு விருந்தினரான டாக்ஸ்ட்ரீம்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் திருவாட்டி ஜுமையா வெற்றிகரமான தொழில்முனைவராக உயர்வதற்குரிய வழிவகைகளை விவரித்தார்.



இளம்தொழில் முனைவர்கள் எதிர்நோக்கும் சவால்களும், வெற்றிகரமான முன்னேற்றத்திற்கான வழிமுறைகளும் ஆய்வரங்கில் தெரிவிக்கப்பட்டன.

முஸ்லிம் இளைஞர்களைத் திறன்மிக்க வருங்காலத் தலைவர்களாகவும், சிறந்த சமூகத் தொண்டர்களாகவும் உருவாக்கும் இலக்குடன் இளைஞர் அணியை அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார மன்றம் அமைத்துள்ளது. சமூகத்திற்குப் பயனளிக்கும் பற்பல நிகழ்ச்சிகளையும் செயல் திட்டங்களையும் மன்றம் தொடர்ந்து மேற்கொள்ளும் என்று அதன் தலைவர் ஷேக் அலாவுதீன் தெரிவித்தார்.

---

சிறப்புடையதாகவும் இருக்கும் என்று ஜனாப் ஃபரியுல்லாஹ் குறிப்பிட்டார்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட பல நிகழ்ச்சிகளை, அவர் நினைவு கூர்ந்தார். சிக்லாப் இந்திய நற்பணிக் குழு, முதலான அமைப்புகளின் ஆதரவுடன் 2011ல் நடைபெற்ற நோன்புப்பெருநாள் ஒன்றுகூடல் சிறந்த எடுத்துக்காட்டு. ஜாமியா சூலியாவுடன் இணைந்து அதே ஆண்டில் நடத்திய இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட துணைப்பிரதமரும், நிதியமைச் சருமான தர்மன் சண்முக ரத்னம் நமது இன, சமய நல்லிணக்கம், ஐக்கியம், புரிந்துணர்வு ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டான நிகழ்ச்சி இது எனப் பாராட்டினார். ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் கல்வி, சமூகநலப் பணிகளை ஜனாப் ஃபரியுல்லாஹ் எடுத்துரைத்தார். இரண்டு குழந்தைப் பராமரிப்பு இல்லங்களை அது நடத்தி வருகிறது. சங்கத்தின் முன்னாள் தலைவர், மர்ஹூம் எம்.கே.ஏ. ஜப்பார் முதல் இல்லத்தை 2004ல் தொடங்குவதற்கு வழிவகுத்தார். இரண்டாவது பராமரிப்பு இல்லம் 2010ல் நிறுவப்பட்டது. மாணவர்களுக்கு மதரஸா வகுப்புகளை சங்கம் நடத்துகிறது. மூன்று இடங்களில் நடைபெறும் வகுப்புகளில் நூறுக்கணக்கான மாணவர்கள் பயில்கின்றனர்.

# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க குடும்பதின நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 23.03.2014 அன்று, காலை 10 மணி முதல், மாலை 5 மணி வரை, "சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி" ஒன்றை, சிங்கப்பூர் கிழக்கு கடற்கரை பூங்காவில் மிகச் சிறப்பாக நடத்தியது.



சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சங்கத்தின் தலைவர், ஜனாப் ஹாஜி நசீர் கனி, JP, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூரில் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆற்றி வரும் கல்வி சார்ந்த சமூக சேவைகளை பாராட்டிப் பேசினார். பென்கூலன் பள்ளிவாசல் துணைத்தலைவர், ஹாஜி முஹம்மது ரபீக், சிறப்பு விருந்தினருக்கு பொன்னாடைப் போர்த்தி நினைவுப்பரிசு வழங்கினார். சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக மருத்துவமனையின் மகப்பேறு மருத்துவ நிபுணரும், பேராசிரியருமான திருமதி வனஜா கலைச்செல்வன், பெண்களுக்கான மருத்துவ சொற்பொழிவும், கேள்வி பதில் அங்கமும் நடத்தினார். ஆன்மீக இசைத்தென்றல் ஜனாப் ஜைனுல் ஆபிதீன் பைஜியின் பாடல்களும் இடம்பெற்றன.

சிங்கப்பூரில் ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையிலும், சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தி, ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும், நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், தொடக்கநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகள் இடம்பெற்றன. மதிய உணவும், தேநீர் விருந்தும், அதிர்ஷ்டக் குலுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட இக்குடும்பத்தின நிகழ்ச்சியில், சுமார் 300 பேர் கலந்து சிறப்பித்தனர்.

# ரிஃபாயி நாயகர் மவ்லூது

அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வழியில் மார்க்க, சமூக நற்பணியாற்றிய ஞானச்செம்மல் ஆரிபு நாயகரைச் சிறப்பிக்கும் மவ்லூது நிகழ்ச்சிகள் அண்மையில் நடைபெற்றன.

சிங்கப்பூர் ரிஃபாயி தரீக்கா சங்கம் மார்ச் முதல் நாளிலிருந்து 13.3.2014 வரை ஹலரத் சுல்தானுல் ஆரிஃபீன் ஷெய்க் சையது அஹமது கபீர் ரலி மவ்லூதை அப்துல் கபூர் பள்ளிவாசல் அடித்தள அரங்கில் நடத்தியது.

நிறைவு விழாவில் பெரம்பலூர் மௌலவி K.M.Y. ஷாஹுல் ஹமீது மன்பயி 'விலாயத்' எனும் தலைப்பில் உரையாற்றினார். அவர் எழுதிய 'தொழுவோம் வாருங்கள்' நூல் வெளியீட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றது. 108 தலைப்புகளில் தொழுகை முறையை எடுத்துரைக்கும் 332 பக்க நூல் இது. நூலின் ஒரு பிரதியை சங்கத்தின் சார்பில் நமது எழுத்தாளர் ஜே.எம்.சாலிக்கு, P.S. நிஜாமுதீன் வழங்கினார். அவரும் ஜனாப் சலாம்

# பல்லாக்கு வலியுல்லாஹ் நினைவு நாள் மவ்லூது

கீழக்கரை மவ்லூது குழுவின் சார்பில் பல்லாக்கு வலியுல்லாஹ் மஹான் ஹபீப் முஹம்மது சதக்கத்துல்லா அவர்களின் 75ஆம் ஆண்டு நினைவு நாள் பாத்திஹா சிங்கப்பூரில் நடைபெற்றது.

தெலுக் ஆயர் ஸ்ட்ரீட், அல் அப்ரார் பள்ளிவாசலில் 26.2.2014 மாலை 5 மணிக்கு தொடங்கிய மவ்லூது நிகழ்ச்சிக்கு வருகையளித்த அனைவரையும் மவ்லூது குழுவின் தலைவர் ஹாஜி பாதுஷா கனி வரவேற்றார்.

பல்லாக்கு வலியுல்லாஹ் என்று போற்றப்படும் ஹபீப் முஹம்மது சதக்கத்துல்லா அவர்கள் கல்வத்து நாயகம் அவர்களுடன் கல்வி பயின்று, மாப்பிள்ளை லெப்பை அவர்களிடம் தீட்சை பெற்று அரும்பெரும் ஆன்மீகப் பணிபுரிந்து கீழக்கரைக்குப் புகழ்சேர்த்த இறைநேசச்செல்வர். ஆன்மீக நற்பணியாற்றி வந்த பல்லாக்கு வலியுல்லா அவர்கள் 92 வயதில் மறைந்தார்கள். கீழக்கரை புதுப்பள்ளிவாசலை அடுத்துள்ள தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்,

அல் அப்ரார் பள்ளிவாசல் இமாம் மில்லத் இஸ்மாயில் பல்லாக்கு வலியுல்லா அவர்களின் ஆன்மீகத் திருப்பணிகளை விவரித்து உரையாற்றினார். பல்லாக்கு வலியுல்லா அவர்கள் உள்ளிட்ட கீழக்கரை அவுலியாக்களின் வரலாற்றை தமிழகத்து தர்காக்கள் எனும் நூலாக வெளியிட்டுள்ளார் எழுத்தாளர் ஜே.எம்.சாலி.

அதில் இடம் பெற்றுள்ள ஒரு பகுதி:
"தொண்டியில் உறையும் அபூபக்கர் வலியுல்லா இவர்களின் பாட்டனார். அவர்களின் பாரம்பரியத்தில் புதல்வர் லெப்பை கனி ஆலிம் சாகிபு வழிவந்த நூர் முகம்மது சாகிபு அவர்களின் திருப்புதல்வராக பல்லாக்கு வலியுல்லா கீழக்கரையில் பிறந்தார்கள். பிறந்தநாள் ஹிஜ்ரி 1268 ரபியுல்அவ்வல் பிறை பன்னிரண்டு. தாயார் பாத்திமா அம்மையாரும் தந்தையாரும் அவர்களுக்குச் சூட்டிய பெயர்தான் ஹபீப் முகம்மது சதக்கத்துல்லா. பல்லாக்குத் தம்பி என்றும் செல்லமாக அழைக்கப்பட்டு வந்தார்கள்..."



ஹாஜி பாதுஷா கனி

பள்ளிவாசல் நிர்வாகிகளும் கீழக்கரை அன்பர்கள் முதலானோரும் மவ்லூது நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பல்லாக்கு வலியுல்லா பாரம்பரிய வாரிசான ஹாஜி பாதுஷா கனியும், அவருடைய புதல்வர் சீனி ஜாபர் கனியும் மவுலூது நிகழ்ச்சியை முன்னின்று நடத்தினர். ஆண்டுதோறும் பல்லாக்கு வலியுல்லா நினைவு மவ்லூது நிகழ்ச்சி நடைபெறும் என்று ஹாஜி பாதுஷா கனி நாடியிடம் தெரிவித்தார். தங்கள் முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நிகழ்ச்சியின் நிறைவாக அனைவருக்கும் தப்ரூக் வழங்கப்பட்டது.

---

அவர்களும், ஹாஜி சலீமும், மவ்லூது விழாவை முன்னின்று நடத்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவாக துஆ ஓதப்பட்டது. மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ரிஃபாயி தரீக்கா சங்க நிர்வாகம் அனைவருக்கும் தப்ரூக் வழங்கியது.

ராத்தீப் புர்தா ஷரீப் அமைப்பும் ஆரிஃப்பு நாயகர் மவ்லூது நிகழ்ச்சியை நடத்தியது. சுல்தான் பள்ளிவாசல் கீழ்த்தளத்திலுள்ள பன்னோக்கு மண்டபத்தில் 27.3.2014 மாலை மக்ரிப் தொழுகைக்குப் பிறகு மஜ்லிஸ் இடம்பெற்றது. இஷா தொழுகைக்குப் பின் சிறப்பு துஆ ஓதப்பட்டு தப்ரூக் வினியோகிக்கப்பட்டது.

# நாகூர் கந்தூரி விழாவை சிறப்பிக்க சிங்கப்பூரிலிருந்து கொடி

நாகூரில் நடைபெற இருக்கும் கந்தூரி விழாவை முன்னிட்டு அங்கு கொடி அனுப்பும் நிகழ்ச்சியை நாகூர் சங்கமும், சிங்கப்பூர் முஸ்லிம் நல சங்கமும் நடத்தின.

கடந்த 9.3.2014 ஞாயிறு அன்று சவுத் பிரிட்ஜ் ரோடு ஜாமியா சூலியா பள்ளியில் இடம்பெற்ற விழாவில் சிங்கப்பூரின் முன்னாள் மூத்த இணை அமைச்சர் ஜைனுல் ஆபிதின் ரஷிது, ஹாஜி அப்துல் ஜலீல் PBM, சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவை தலைவர் பரிஹுல்லாஹ், முயிஸ் அதிகாரி நஸ்ரின் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அஸர் தொழுகைக்குப் பின் மவ்லூது மஜ்லிஸும், மக்ரிப் தொழுகைக்குப்பின் மவுலவி



அல்ஹாஜ் அல்ஹாஃபில் சாகுல் ஹமீது நூரி அவர்களின் பயான் நடைபெற்றது. இஷாவுக்குப் பின் துவா ஓதி வந்திருந்த அனைவருக்கும் தப்ரூக் வழங்கப்பட்டது.

விழாவுக்கான ஏற்பாடுகளை ஃபஹ்ருதீன், ஷாஜஹான் மற்றும் இரண்டு சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# "அரசு மானியங்கள்" இலவசக் கருத்தரங்கு

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யும், சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழிற்சபையும், சிங்கப்பூர் நாணயமாற்று வணிகர் சங்கமும் இணைந்து, ஞாயிற்றுக்கிழமை 19.1.2014 அன்று, காலை மணி 10 முதல் பிற்பகல் 1 மணி வரை, "அரசு மானியங்கள்" என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான இலவசக் கருத்தரங்கு ஒன்றை, பீட்டி சாலையில் அமைந்துள்ள சிண்டா கலையரங்கத்தில் நடத்தின.

சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழிற்சபையின் தலைவரும், கணக்காய் வாளருமான திரு. ரா. நாராயணமோகன், இக்கருத்தரங்கை நடத்தினார். சிங்கப்பூர் நாணயமாற்று வணிகர் சங்கத்தின் தலைவரும், "புதிய நிலா" இதழின் ஆசிரியருமான, ஜனாப் மு. ஜஹாங்கீர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். கேள்வி பதில் அங்கமும் இடம்பெற்றது.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யின் தலைவர், ஆடிட்டர் முனைவர் ஜனாப் ஹாஜி



முஹிய்யத்தீன் அப்துல் காதர் தலைமையேற்று நடத்திய இக்கருத்தரங்கில், தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு மு. ஹரி கிருஷ்ணன், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் செயலாளர், ஜனாப் ஹாஜி மு.அ. மசூது, இந்திய முஸ்லிம் பேரவையின் செயலாளர் ஜனாப் நிஜாமுதீன், "சிங்கை முஸ்லிம் முரசு" இதழின் ஆசிரியர் ஜனாப் ஹபீப் முஹம்மது, சிங்கப்பூர் நாகூர் சங்கத்தின் செயலாளர் ஜனாப் முஹம்மது கௌஸ், சிங்கப்பூர் காயல்பட்டினம் நலஅபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதி முனைவர் ஜனாப் முஹம்மது லெப்பை, மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து பயன்பெற்றனர். சங்கத்தின் செயலாளர் ஜனாப் அப்துல் சுபஹான் நன்றி கூறினார்.